


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## NOVEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 26.11.2018

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்
- புத்தகங்கள்




APEC
Asia-Pacific
Economic Cooperation





## இந்திய நிகழ்வுகள்

- காவல்துறை தகவல் தொடர்புகளை நவீனப்படுத்துவதற்கான, அனைத்து இந்திய காவல்துறை தலைவர்களின் **தகவல் தொடர்பு மாநாடானது புதுடெல்லியில் இரண்டு நாட்கள்** நடைபெற்றது. இம்மாநாட்டை தகவல் தொடர்பு மற்றும் இரயில்வே ஆகியவற்றிற்கான மத்திய இணையமைச்சரான மனோஜ் சின்ஹாவால் தொடங்கி வைக்கப்பட்டது.
    - இம்மாநாட்டின் கருத்துருவானது, **"காவல்துறை தகவல் தொடர்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் சவால்களைக் களைதல்"** என்பதாகும்.

- தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து **இந்தியா மற்றும் அமெரிக்கா** ஆகிய இரு நாடுகளின் சிறப்பு படைகளுக்கு இடையேயான **"வஜ்ரா பிரகார்" என்னும் 2018-ம்** ஆண்டின் சிறப்பு பயிற்சியானது, இராஜஸ்தானின் பிகானிரில் உள்ள **மகாஜன் ஆயுதப்படை தளத்தில்** தொடங்கியுள்ளது.

- **சகோதரத்துவம், பன்முகத்தன்மை** ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரில் இந்தியாவின் முதலாவது **"தேசிய மத நல்லிணக்க நிறுவனத்தை"** இந்திய அரசு அமைக்க உள்ளது.
    - இம்மத நல்லிணக்க நிறுவனம் சீக்கிய குருவில் முதன்மை குருவான **குருநானக் அவர்களின் 550-வது பிறந்த நாளை** நினைவுகூறும் **(நவம்பர் 23,2018)** வகையில் அமைக்கப்பட உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- ஆசியா – பசிபிக் பிராந்தியத்தின் பொருளாதார மேம்பாட்டுக்கான **(APEC – Asia-Pacific Economic Cooperation)** ஆசியா – பசிபிக் பொருளாதாரக் கூட்டிணைவின் **2018ஆம் ஆண்டிற்கான உச்சி மாநாடானது** சமீபத்தில் **பப்புவா** நியூகினியாவின் போர்ட் மோர்ஸ்பியில் நடத்தப்பட்டது. இம்மாநாடானது **பப்புவா நியூ கினியாவின் பிரதமர் பீட்டர் ஓ நெய்ல்** என்பவர் தலைமையில் நடைபெற்றது.

We Shine Academy™

- APEC-ன் 21 உறுப்பினர் நாடுகளும் இம்மாநாட்டில் பங்கு பெற்றது.
- APEC - 1989 ஆம் ஆண்டு ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பொருளாதார ஒத்துழைப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது.
- இதன் **தலைமையகம் சிங்கப்பூரில்** உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஆஸ்திரேலியாவில் உள்ள **கான்பெராவில் நடைபெற்ற காமன்வெல்த் வாள்சண்டை சாம்பியன்ஷிப்** போட்டியில் சீனியர் "சேபர்" பிரிவில் தமிழகத்தை சேர்ந்த **சி.ஏ. பாவானி தேவி,** இங்கிலாந்து வீராங்கனை எமிலி ராக்சை வென்று **தங்கம்** வென்று சாதனைப் படைத்துள்ளார்.
  - இதன் மூலம் **காமன் வெல்த் வாள் சண்டை போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர்** (சீனியர் பிரிவில்) என்ற சாதனையை பவானி தேவி படைத்துள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- லடாக்கின் **ஹென்லியில்** உள்ள இந்திய வானியல் ஆய்வு மையத்தில் அமைந்துள்ள, நோவா வெடிப்பை ஆய்வு செய்யும் திட்டத்தின் தொடர்ச்சியான, **0.7 மீட்டர் அளவுடைய GROWTH – India** தொலைநோக்கியானது முதன்முறையாக தனது கண்டுபிடிப்பை பதிவு செய்துள்ளது.
  - GROWTH – India என்பது பேரண்டத்தில் மாறுநிலை நிகழ்வுகளை கண்காணிப்பதற்காக பல நாடுகள் இணைந்து செயல்படுத்தும் முன்முயற்சியான மாறுநிலை நிகழ்வுகள் நிகழ்வதை கண்காணிக்கும் உலக நிலை உணர்த்தி **(GROWTH – India Relay of Observatories Watching Transients Happen)** என்ற அமைப்பின் ஒரு பகுதியாகும்.
- **குறிப்பு:**
  - GROWTH – India என்பது அண்ட நிகழ்ச்சிகளை கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட **இந்தியாவின் முதலாவது** மற்றும் முற்றிலும் முழுவதுமான எந்திரவியல்

(**Robotics**) தொலைநோக்கியாகும்.

## நியமனங்கள்

- இந்தியக் குடிமைப்பணி அதிகாரியான **ஜலால் ஸ்ரீவஸ்தவா** இந்தியாவின் உள்நாட்டு நீர்வழி ஆணையத்தின் **(Inland Waterways Authority of India – IWAI)** தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். IWAI ஆனது மத்திய கப்பல், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
    - ஸ்ரீ வஸ்தவா பெண்களுக்கான **'ஷக்தி கேப்'** மற்றும் **"உர்ஜா"** போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியமைக்காக புகழ்பெற்றவர் ஆவார்.

## புத்தகங்கள்

- புதுடெல்லியில் டாக்டர் **இராஜேஷ் பட்** என்பவரால் எழுதப்பட்ட : **"காஷ்மீர் வானொலி – அமைதி மற்றும் போர் காலங்களில்"** என்ற புத்தகத்தை மத்திய அமைச்சர் டாக்டர் ஜிந்தேந்திர சிங் வெளியிட்டுள்ளார்.
    - இப்புத்தகமானது ஸ்டெல்லர் வெளியிட்டாளரால் வெளியிடப்படுகிறது.